18.11.2025

O.S.No. 187/2023

PW1– கல்யாண்குமார்– த/பெ. துரைராஜ் என்ற மாடசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.11.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வழக்கு தபசில் சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது. எனது தந்தையிடம் இருந்து பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார். பிரதிவாதியாகிய எனதுஅண்ணன் வீடுகட்டி சுமார் 10 ஆண்டுகள் இருக்கும். நான் 10 ஆண்டுகள் என பொய்யாக சொல்கிறேன் என்றாலும், வீடுகட்டி 40 ஆண்டுகள் ஆகிறது என்றாலும் சரியல்ல.

2. எனது தந்தையை நானும், பிரதிவாதியும் பராமரித்துவருகிறோமா என்றால் எனது தந்தையை எனது அண்ணன் பார்த்துக்கொள்கிறார், எனதுதாய் என்னுடன் வாடகை வீட்டில் உள்ளார். எனதுதந்தைக்கு 60 வயது ஆகிறது, அவர் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை.

3. எனது தந்தை வழக்கு சொத்தின் மாடிவீட்டில் குடியிருந்து வருகிறார். எனது தந்தை வழக்கு சொத்திலுள்ள குளியலறை, கழிவறை பயன்படுத்திவருகிறார் என்றால் சரிதான். எனது தந்தையும், பிரதிவாதியும் வழக்கு சொத்தின் மாடி வீட்டில் எனது தந்தை ஆயுசுவரை பயன்படுத்தி கொள்ளலாம் என ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, எனது தந்தையை பராமரிக்க வேண்டும் என்று பிரதிவாதிக்கு ஆவணம் ஏற்படுத்தும் சமயத்தில் ஒரு கட்டளை விதித்தார்.

4. எனது தந்தை கிரையம் கொடுத்த சமயத்தில் 13.02.2020ம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான், அதைபோல் எனது அண்ணன், என்னிடமும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார். மேலும் என்னிடம் போடப்பட்ட ஒப்பந்தமானது வீட்டை விற்கும் சமயத்தில் நம் இருவரில் ஒருவர் எடுத்துக்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

4. வா.சா.ஆ.3 ஆவணத்திறகு விரோதமாக நான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தையால் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வீட்டில் தென்பகுதி எனது அண்ணன் வைத்துகொண்டு வடபகுதியை எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் எழுதிக்கொடுக்கும் சமயத்தில் மேற்படி வீடானது பாகபிரிவினை செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பாகம் செய்தால் மாடியின் மேல்தளம் பயன்படுத்தமுடியாமல் போகிவிடும் என்றால் சரியல்ல.

5. மாடிக்குசெல்லும் படிக்கட்டு எந்தபகுதியில் உள்ளது என்றால் தென்பகுதியில் உள்ளது. கிரைய ஆவணத்தின் தென்பகுதியில் உள்ள பிரதிவாதியின் வீட்டை கீழ்புறசுவரை இடித்து பாதை ஏற்படுத்தவேண்டும் என்று எழுதியுள்ளது நடைமுறைக்கு சாத்தியமில்லாதது என்றால் சரியல்ல. மேற்படி சுவரை இடித்தால் தென்பகுதி வீடே இடிந்துவிடும் என்றால் சரியல்ல. மேற்படி கட்டளை ஏற்படும் சமயத்தில் நாங்கள் பொறியாளரை கலந்து கருத்துரை பெற்றோமா என்றால் பெறவில்லை, ஊர் பெரியவர்கள் வைத்துபேசி முடிக்கப்பட்டது.

6. மேற்படி பாதை ஏற்படுத்தினால் பிரதிவாதியின் அகலம் குறைந்துவிடும் என்றால் சரியல்ல, எனக்கு 25 அடியும், எனதுஅண்ணனுக்கு 31 அடியும் ஒதுக்கப்பட்டது, மேற்படி பாதை ஏற்பட்டால் பிரதிவாதிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. மேற்படி அளவுகள் எனது கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

7. நான் கேட்டுள்ள 3ம் தபசில் நடைபாதை உரிமை எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனதுதந்தை ஆயுசுக்குபின்பு மேற்படி பாதை ஏற்படுத்தவேண்டும் என்று ஒப்பந்தம் ஏற்படுத்திவிட்டு, தற்போது எனதுதந்தை உயிருடன் இருக்கும்போது இந்த வழக்கை தாக்கல் செய்தது சட்டப்படியற்றது என்றால் சரியல்ல.

8. 3ம்தபசில் நடைபாதை உருவாக்குவதற்கும், பிரதிவாதி வீட்டை இடிப்பதற்கும் பிரதிவாதி மேல்கட்டுமானம் செய்வதற்கும் பிரதிவாதிக்கு எவ்வளவு தொகை செலவாகும் என எனக்கு தெரியாது. மேலும் நான் சொல்வதுபோல் பிரதிவாதியின் வீட்டை இடித்தால் எனதுதந்தையால் குளியலறையும், கழிவறையும் பயன்படுத்தமுடியாது என்றால் சரியல்ல. 3ம் தபசில் தற்போது ஸ்தலத்தில் கிடையாது என்றால் சரிதான், அதைபொறுத்து நான் கோரியுள்ளநிரந்தர தடையாணை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.